# 1. நல்ல மனம்.

ராமா! ராமா!

வீட்டிற்குள்ளிருந்து கூப்பிடும் குரல் கேட்டது. இவ்வளவு சத்தமாகக் கூப்பிடுவது யாராக இருக்கலாம் என்று ராமனுக்கு சந்தேகம்.



எப்பொழுதுமே வராது. அவனது எசமானி யசோதை அம்மாளின் குரல் என்பது, அந்தக் கணீர் என்ற குரலைக் கேட்டாலே புரிந்துவிடும்.

பத்து வீட்டிற்கு அப்பாலும் கேட்கும்படி கத்திக் கூப்பிடும் எசமானியின் அழைப்புச்சத்தம் கேட்ட போது, ராமன் தண்ணீர்க்குழாயைக் கையில் பிடித்தபடி, தோட்டத்தில் பூச்செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான்.

மீண்டும் ஒரு அலறல் குரல். ராமன் தண்ணீர்க் குழாயைத் தரையில் அப்படியே போட்டு விட்டு வீட்டிற்குள் ஓடினான்.

யசோதை எதிரே வந்து நின்றாள். ராமா! எத்தனை தடவை கூப்பிடுறது! கூப்பிட்ட குரலுக்கு வராமலிருந்தா, நீ இங்கே இருந்துதான் என்ன பிரயோசனம்? ‘இனிமே, உடனே வந்துடுறேம்மா!’ ராமன் தாழ்ந்த குரலில், தணிந்து போய் கூறினான்.

‘அய்யா அவசரமாக வெளியே போகனும். அதற்குள் இந்தச் சீட்டில் இருக்கும் மருந்தை வாங்கிக்கொண்டு வா! ரொம்ப அவசரம்! என்று கூறியவாறு, அவனது கையில். பணத்தையும் மருந்துச் சீட்டையும் தந்தாள். ‘எந்த மாதிரி வேலையாயிருந்தாலும் செய்யத்தானே இருக்கிறேன். அதனால் தானே எனக்கு வேலைக்காரன்னு பேரு’ என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டே திரும்பினான் ராமன்.

‘இந்தா பாரு ராமா! மசமசன்னு நடக்காதே... அங்கே இங்கேயும் வேடிக்கைப் பார்க்காதே! யார்கிட்டேயும் நின்னு அரட்டை அடிச்சிக்கிட்டிருக்காதே போனமா வந்தமான்னு இருக்கனும், புரியுதா?’ என்று ஒரு பிரசங்கமே பண்ணினாள் யசோதை!

“இதோ ஒரு நிமிடத்துல ஓடி வந்துடறேம்மா” என்று தன் நடையில் வேகத்தைக் காட்டினான் ராமன். ஓட்டமாக ஓடிப்போய் திரும்பி வரத்தக்க வயதுள்ள வாலிபனுமல்ல... தட்டுத்தடுமாறித் தள்ளாடி நடக்கும் வயோதிகனுமல்ல ராமன். சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க மனிதன். நடுத்தர வயதுடைய ஆளாக இருந்தாலும், வறுமையில் வதங்கியதன் காரணமாகவும், ஓயாத உழைப்பின் காரணமாகவும் மிகவும் இளைத்தும் களைத்தும் காணப்பட்டான்.

அந்த வீட்டில் ராமன் தோட்டக்காரன் மட்டுமல்ல, வேலைக்காரன், எடுபிடி. சமயத்தில் கணக்குப் பிள்ளையாகவும்கூட இருப்பான். ஏதோ ஒரு வேலைக்காக, எசமானி யசோதையும், எசமானர் வாசுதேவனும், அடிக்கடி ராமனைக் கூப்பிட்டுக் கொண்டுதான் இருப்பார்கள். ராமன் இல்லையென்றால், தம்பதியர் இருவருக்கும் எந்தவேலையும் ஓடாது. நல்ல வசதியுள்ள குடும்பத்தில் பிறந்தவர்கள் யசோதையும் வாசுதேவனும், வாசுதேவன் ஒரு பெரிய கம்பெனியில் மேனேஜராக வேலை பார்க்கிறார். ஆயிரக்கணக்கில் சம்பளம். சொந்தமா பெரியவீடு. கார், மோட்டார் சைக்கிள் போன்ற வாகன வசதிகளும் உண்டு.

கணவன் மனைவி இருவரும் அதிக ஆனந்தமாகவே வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் இருவரைத்தவிர அந்த வீட்டில் வேறுயாரும் இல்லை. ராமனும் சாதாரண வேலைக்காரனாகவே அந்த வீட்டில் புகுந்து, பல ஆண்டுகள் உழைத்து, இன்னும் வேலைக்காரப் பையனாகவே இருக்கிறான். சம்பளத்தில் அதிகம் கூடவில்லையென்றாலும், வீட்டைப் பாதுகாத்து, எசமானியம்மாளுக்குத் துணையாக இருந்து, எடுபிடி வேலை செய்யும் வேலைகள்தான் அதிகமாக கூடிவிட்டிருந்தன.

மருந்தை வாங்க அனுப்பிவைத்திருந்த யசோதை, சமையலறைக்குள் புகுந்து, சகல காரியங்களையும் மிகவும் சிரத்தையுடன் செய்யத் தொடங்கி விட்டாள். வாசுதேவன் குளியறைக்குள் நுழைந்து கொண்டார். வீட்டில் ரேடியோ சத்தம் மட்டும் இசைபரப்பிக் கொண்டிருந்தது.

வேகமாக ஓட முடியாமலும், மெதுவாக நடந்து போக மனமில்லாமலும், உள்ளத்தால் வேகமாகவும் நடையில் மெதுவாகவும் ராமன் சாலையிலே போய்க்கொண்டிருந்தான். மருந்துச் சீட்டைக் கையில் வாங்கிக் கொண்டதும், அவனது மனதில் முதலில் நிழலாடிய நினைவு, அவனது மனைவி சீதையைப் பற்றித்தான். அவனது மனைவி பிய்ந்து கிடக்கும் தன் குடிசைக்குள்ளே, கிழிந்துபோன கோரைப்பாயின் மேல், தீராத காய்ச்சலுடன் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் காட்சி, அவன் மனக்கண் முன்னே வந்து நின்றது. காய்ச்சலில் அவள் படுத்து ஒரு வாரம் ஆகிவிட்டது. அதற்கென்று மருந்துகள் வாங்கித்தர ராமன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம், தோல்வியிலேயே முடிந்து போயின.

சீதை இரண்டு மூன்று வீட்டில் காலையும் மாலையும் வேலை செய்து, இருபதோ, முப்பதோ கொண்டு வருகிறாள். ராமனுக்கு இன்னும் கொஞ்சம் அதிக சம்பளம். இரண்டு பேர் சம்பளத்தையும் சேர்த்தால் கூட, வாரத்தில் பாதி நாட்கள் தான் சாப்பிட முடியும்!

மீதி நாட்களை, அப்படி இப்படி என்று அரைப்பட்டினியும் கால் பட்டினியுமாக ஓட்டித்தான், காலத்தைக் கழித்து வந்தனர். ராமன் சீதை தம்பதிகளுக்கு ஒரே ஒரு மகன் உண்டு. அவனுக்கு, குகன் என்று பெயரிட்டனர். செல்லமாக ராஜா போல வளர்க்க அவர்களுக்கு ஆசைதான். செல்வ நிலைமை அப்படி இல்லையே!

தங்களைப்போல தங்கள் மகனும் வேலைக்காரனாக, கூலிக்காரனாக வாழவே கூடாது! எப்படியேனும் உயர்ந்த படிப்பைப் படிக்கவைத்து, நல்ல உத்தியோகத்தில் இருக்கச் செய்ய வேண்டும் என்பதும் அவர்களுக்கு ஆசை தான். நினைத்ததெல்லாம் அப்படியே நடக்கிறதா என்ன? எப்படியோ அவர்கள் முயற்சி பலித்தது. தங்கள் கூட இருந்தால், பையனுக்கு படிப்பு ஏறாது என்ற முடிவுக்கு வந்து, அவனைக் கொண்டு போய் ஒரு விடுதியில் சேர்த்து விட ஏற்பாடு செய்தனர்.

உணவு இலவசமாகத் தந்தனர் என்றாலும், மற்ற செலவுகளுக்கு ராமன் தானே குகனுக்குத் தரவேண்டும்! அடிக்கடி குகனுக்குப் பணம் தேவைப்படும். குறைந்த தேவையைக்கூட பூர்த்தி செய்ய முடியாத நிலைதான்.